**செப்டம்பர் - 28**

**உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்.** - 1**பேது** 5 : 8, 9.

நம்முடைய தீர்மானம் உறுதியானதும் நம்பிக்கையுள்ளதாயிருக்கும்போது, பெரிய உதவிகளையும் உபகாரங்களையும் கண்ணுக்குத் தெரியாத மற்ற சக்திகளின் மூலமாக நாம் பெறுகிறோம் என்று உணராதிருந்தோமானால் சாத்தானுடைய எதிர்ப்பு நமக்கு இருக்கிறது என்ற எண்ணமும் மாம்சத்தோடும், இரத்தத்தோடும், ஆனால் துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், உயர்ந்த நிலையிலுள்ள பொல்லாத ஆவிகளோடும் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம் என்ற எண்ணமும் நம்மை பயமுறுத்தும் சோதனையை நாம் உறுதியாய் எதிர்க்கிற எந்த நிமிஷத்திலிருந்தும், கர்த்தருக்கும் அவருடைய விவகாரத்துக்கும் உறுதியாக நிற்கும் அந்த நிமிஷத்திலிருந்து நாம் அவரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் முன்னிலும் அதிக வலிமை அடைகிறோம். நமக்கு எதிராக இருக்கும் எல்லாரையும் விட நமக்காக இருக்கிறவர் மிகவும் பெரியவராயிருக்கிறார் என்ற நம்பிக்கையில் பலமடைகிறோம். தப்பையும், அநியாயத்தையும் கண்டு பிறகு அவைகளை எதிர்க்கத் தயங்கினால், சோதனையின் சக்தி அதிகரிக்கிறது. - Z ’04, 11; '00,32 (R 3300, 2565).

சாத்தான் பொதுவாக மனித ஜாதியின் விரோதி மட்டுமல்லாமல் விசேஷமாக கர்த்தருடைய ஜனங்களின் விரோதியாயிருக்கிறான். ஏனென்றால் அவர்கள் கர்த்தரிடம் உண்மைப்பற்றுள்ளவர்களாயிருக்கிறார்கள். சாத்தான் அவர்களுடைய ஜீவனை அழிக்க ஆசைப்படுகிறான். புது இருதயத்தையும், புது மனதையும், புது சித்தத்தையும் அழிப்பதை விட வேறொன்றும் அவனுக்கு மிக அதிக சந்தோஷத்தைக் கொடுக்கிறதில்லை. அவன் உண்மையான சிங்கமாயிருக்கிறான். அவனுடைய இரைக்காக நம்மை விழுங்க வகை தேடிக்கொண்டிருக்கிறான். வெறும் செயலற்று இருந்தோமானால் அந்நிலை அவனை ஜெயங்கொள்ளாது. ஒரு பலமான தற்காலிகமான எதிர்ப்பும் முடிவாக அவனை பின்னுக்குத் துரத்தாது. மாம்சத்துக்கேற்ற ஆயுதங்களையல்லாமல், ஆவியின் பிரகாரமான ஆயுதங்களை உபயோகித்து கர்த்தரின் வார்த்தை ஆவி இவைகளுடன் நாம் விடா முயற்சியுடன் எதிர்க்க வேண்டும். ஆவி வார்த்தையின் தமஸ்குவின் வாளினால் அவனுடைய உயர்நிலை உறுப்புகள் வெட்டி அவனை முடிவாக நம்மை விட்டு துரத்தி விடுகிறது. - P ’33, 147.

**ஒத்த வாக்கியங்கள்** :-

1**பேது** 1:13; **லூக்** 21:34; **ரோம** 13:13; 1**கொரி** 16:13; 1**தெச** 5:6,8; 1**பேது** 4:7; **யோபு** 1:7,9-12; 2:2-7; **லூக்** 22:31; **யோவா** 8:44; 1**நாளா** 21:1; **சகரி** 3:1,2; **மத்** 4:1-11; 13:19,38,39; **யோவா** 13:2,27; 2**கொரி** 2:11; 11:3,14,15; **எபே** 6:11-17; **யாக்** 4:7.

**கோபுர வாசிப்பு** : Z ’13, 54 (R 5183).

**வினாக்கள்** : **இந்த வாரத்தில் நான் சாத்தானுக்கு எதிராக ஜாக்கிரதையோடு என்னைக் காத்துக் கொண்டேனா**? **எப்படி**? **பலன் என்ன**?